සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උඌණ උපයෝජන රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/06/EP/08/HOU-2022 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ............ | දිනය<br>திகதி<br>Date | 2021.01.24 |
|---|---|---|---|---|---|

சகல மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்.
சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்.
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர்கள்/ உதவிப் பணிப்பாளர்கள்,
சகல சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு,

**<u>“சுபீட்சத்தின் நோக்கு”- சமுர்த்தி வீடமைப்பு வேலைத்திட்டம் - 2022</u>**

**01. அறிமுகம்:-**

ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிக் குடும்பத்தின் பொருட்டும் நிரந்தரமான வீடொன்றினை வழங்குவதற்கு பங்களிப்புச் செய்வதல் என்ற உயரிய நோக்கத்துடன். சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களிடத்தேயே வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பு வேலைத்திட்டம் மாதாந்தம் செயற்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் வீடுகளையுடைய பயனாளிகளின் வீடுகளை திருத்தஞ் செய்தல், மட்டும் நிரந்தரமாக வீடில்லாத மக்களுக்கு நிரந்தமான வீடொன்றினை நிர்மாணித்துக் கொள்ளவும் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றது.

கணினி வேலைத்திட்டத்தின் உதவியுடன் 19.5 இலட்சம் மட்டளவிலான சமுர்த்திப் பயனாளிகளிலிருந்து சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இந்த லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் வறுமையினால் மிகக் கீழ் மட்டத்தில் உள்ள குடும்பங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளையுடைய குடும்பங்கள் தொடர்பில் நேரடியான கவனத்தினை செலுத்துவது குறைவாகவேயுள்ளது. ஆகையினால் வாழ்வதற்கு வீடில்லாத மற்றும் பொருளாதார ரீதியாக வறுமையில்வாடும் இவ்வாறான சமுர்த்தி பயனாளி குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்கும் பொருட்டு அக்குடும்பங்கள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி நிவாரணங்களை வழங்குவதற்காக **“சௌபாக்கியா விசேட வீடமைப்பு வேலைத்திட்டம்”** 2022ம் ஆண்டிலும் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டமானது பல கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

**1. வீடமைப்பு லொத்தர் வேலைத்திட்டம்:**

பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நிவாரணம் பெறும் குடும்பங்களின் தகவல்களைத் திரட்டி தயாரிக்கப்பட்ட பயனாளிகள் தரவுத்தொகுதித் தொகுப்பிலிருந்து கணினி சாரந்த சீட்டிழுப்பினை மேற்கொள்ளும் ஒரே ஒரு வேலைத்திட்டமான வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் பிரதேச செயலகப் பிரிவு ஒன்றுக்கு ஒருவெற்றியாளர் என்ற வகையில் மாதத்திற்கு 335வெற்றிகள் வழங்கப்படுவதுடன் ஒருவருக்கு ரூபா 02 இலட்சம் வீதம் வழங்கி இந்த வேலைத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**2. விசேட வீடமைப்பு வேலைத்திட்டம் (ரூபா 02 இலட்சம் வீதம் வழங்குதல்)**

2022ம் ஆண்டின் பொருட்டு இங்கு குறிப்பிடப்படும் எடுகோள்களுக்கமைய பிரதேச செயலகப்பிரிவு ஒன்றுக்கு 03 வீடுகள் வீதம் வழங்கப்படவுள்ளதுடன் ஒரு வீட்டிற்காக வழங்கப்படும் தொகையானது ரூபா 02 இலட்சமாகும். முன்னைய வருடங்களில் வீடுகள் வழங்கப்பட்ட விதத்திலேயே இதுவும் நடைமுறைப்படுத்துவதுடன் திருத்தங்களின்றி மிகப்பொருத்தமான பயனாளிகளின் பெயர்களை கிராமமட்டத்தில் தெரிவு செய்து பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கியதன் பின்னர் தலைமைக்காரியாலயத்திற்கு உரிய

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

படிவத்தின் பிரகாரம் பெயர்ப்பட்டியலும் தகவல்களும் கிடைக்கப்பெற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். தகுதிகள் இல்லாத பயனாளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது.

**3. விசேட வீடமைப்பு வேலைத்திட்டம் (ரூபா 06 இலட்சம் வீதம் வழங்குதல்)**

பிரதேச செயலகப் பிரிவுக்கு மூன்று பயனாளிகள் வீதம் தெரிவு செய்துகொள்ளப்பட வேண்டியதுடன் திருத்தங்களை மேற்கொள்ளாமல் இருக்க பொறுப்பாக இருத்தல் வேண்டும். பிரதேச செயலகப்பிரிவில் உள்ள மிக வறிய அப்பாவிப்பயனாளிக் குடும்பங்களை தெரிவு செய்ய வேண்டியதுடன் இதன் பொருட்டு ரூபா 06 இலட்சம் வீதம் வழங்கப்படும். மேலும் இதற்கு மேலதிகமாக முன்வைக்கப்படுகின்ற விசேட கோரிக்கைகள் தொடர்பில் அங்கீகரித்த நிதி ஒதுக்கீட்டு எல்லைக்குள் வைத்து மேலும் வீடுகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இங்கு கட்டாயமாக எமது எடுகோள்களைப் பின்பற்றி சமுர்த்தி பயனாளிக் குடும்பங்கள் அல்லது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய குடும்பங்களை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு தகுதிகள் கிடைக்கப்பெறாத பயனாளிகள் அல்லது குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடுகளை நிர்மாணிக்க அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது.

**4. பிற வீடமைப்பு வேலைத்திட்டங்கள். (ரூபா 02 இலட்சம் அல்லது 06 இலட்சம் வீதம் வழங்குதல்)**

மேன்முறையீடுகள் மற்றும் கட்புல செலிப்புல ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்படும் திட்டங்களின் பொருட்டு விசேட வீடமைப்பு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன் ஒரு வீட்டின் பொருட்டு வழங்கப்படும் தொகையானது ரூபா 02 இலட்சம் அல்லது 06 இலட்சம் என ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு வரையறைக்குள்வைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் பொருட்டு மிகக் குறைந்தளவிலான வீடுகளை மாத்திரம் வழங்க முடியும் என்பதனால் அத்தியாவசியமான முன்மொழிவுகளை மாத்திரம் முன்வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். பயனாளிகளின் அல்லது குறைந்த வருமானம் பெறுவோரின் தகவல்கள் தொடர்பிலான வீடமைப்பு லொத்தர் நம்பிக்கைப் பொறுப்புச் சபை திருப்பியடையாவிடின் பிரேரணையின் பொருட்டு அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது.

**5. பாதியளவு பூர்த்தி செய்த வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் (ரூபா ஒரு இலட்சத்தினை வழங்குதல்)**

இதன் பொருட்டு பிரதேச செயலகப் பிரிவுக்கு ஒரு வீட்டினை மாத்திரம் தெரிவு செய்துகொள்ளல் வேண்டும். இங்கு ஒரு வீட்டுக்கு வழங்கும் தொகையானது ரூபா ஒரு இலட்சமாகும் இங்கு ஒரு பிரிவில் வீட்டினைத்தெரிவு செய்யும் போது மிக வறுமை நிலையினால் வாடும் எந்ததொரு விதத்திலும் எதிர் காலத்தில் கட்டியெழுப்ப முடியாமல் பாதியளவு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரூபா ஒரு இலட்சத்திற்குள் கட்டியெழுப்ப போதுமானளவு விதத்திலுள்ள வீடொன்றினைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்(சமுர்த்திப் பயனாளிகள் அல்லது குறைந்த வருமானம் பெறுவோரை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.)

**02. வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்.**

**1) வீடமைப்பு லொத்தர் வேலைத்திட்டம்.**

2002ம் ஆண்டிலிருந்து இருபது வருடங்கள் பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்பு லொத்தர்கள் சீட்டிழுப்பு வேலைத்திட்டம் இடைவிடாது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் ஒவ்வொரு மாத்திற்கொரு முறையும் கணினி வேலைத்திட்டத்தின் மூலம் சீட்டிழுக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் ஒரு பிரதேச செயலகப் பிரிவுக்கு ஒரு வெற்றியாளர்என்ற வகையில் தெரிவு செய்யப்படும் என்பதுடன் அந்த ஆவணங்கள் மற்றும் நிதி மாவட்டங்களுக்கு கிடைக்க ஆவண செய்யப்படும் 2021 ஒக்டோபர் மாதத்திலிருந்து வெற்றியாளர்களின் பெயர்ப்பட்டியல் சமுர்த்தி வெப் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அது ஒவ்வொறு மாதமும் 10-15ம் திகதிகளில் வழங்கப்படுவதுடன் குறித்த விடயப்பொறுப்பு உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

அதன் பிரகாரம் 03 மாதங்களுக்குக் குறையாக காலத்திற்குள் இந்த வெற்றிபெற்ற பரிசுக்தொகையினை பயனாளிகளிடம் வழங்க வேண்டியதுடன் அவ்வாறு வழங்க முடியாமல் போன தொகையினை தலைமைக் காரியாலயத்தின் நிதியக்கணக்கில் வரவிடல் வேண்டும். விசேட காரணங்களின் பொருட்டு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரப் பிரமாணங்களுக்கு அமைய பிரதேச செயலாளர்களுக்கும், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் நிதி கோரப்படுகின்ற விசேட சந்தர்ப்பங்களில் பயனாளிகளின் கோரிக்கைகள் தொடர்பில் பிரதேச செயலாளர்கள் திருப்திப்படுவதாயின் பணத்தினை விடுவித்தல் வேண்டும்

**2) விசேட வீடமைப்பு வேலைத்திட்டம் (ரூபா 02 இலட்சம் வீதம் வழங்குதல்)**

## I. செயற்படுத்தும் விதம்

- இங்கு பயனாளியின் கோரிக்கைக் கடிதத்துடன் வசித்து வரும் வீட்டின் தற்போதைய நிலையினைக் காட்டக்கூடிய புகைப்படம் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

- தெரிவுகளை மேற்கொள்ளும் போது உரிய குடும்பங்களின் முழு விபரங்களுடனான தகவல் கோவையொன்றினை பராமரித்துச் செல்லல் வேண்டும்.

- சமுர்த்தி உத்தியோகத்தர்களின் (வலய முகாமையாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின்) பிரதேச செயலாளரின் சிபாரிசுகளின் பிரகாரம் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் அல்லது மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்துடன் தலைமைக்காரியாலயத்திற்கு பயனாளிகள் தொடர்பான தகவல்களை வழங்கியதன் பின்னர் சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர் தகுதிகளை பூர்த்தி செய்துள்ள பயனாளிகளுக்கு வீட்டினை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி மாவட்டத்திற்கு விடுவிக்கப்படும்.

- பயனாளிகளுக்கு நிதியினை விடுவிக்கும் போது வலய முகாமையாளரின் சிபாரிசினை வழங்குதல் வேண்டும்.

- மேலும் இந்த வீடுகளை நிர்மாணிக்கும் போது மக்கள் பங்களிப்பு மற்றும் குறித்த பிரதேசத்தின் தனவந்தர்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வது பொருத்தமானதாகும் என்பதுடன் அதன் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

## II. வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் பொறுப்பு

| | |
|---|---|
| 1. மாவட்டச் செயலாளர்/ மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்:- | மாவட்டத்தின் மொத்த வேலைத்திட்டம் தொடர்பான காண்காணிப்பும் நெறிப்படுத்தலும். |
| 2. பிரதேச செயலாளர் :- | தனது அதிகார பிரதேத்திற்குள் கண்காணிப்புக்களை மேற்கொள்ளல். |
| 3. தலைமையக முகாமையளார்கள்/ முகாமைத்துவப் பணிப்பாளரகள்/ சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி (வலய) முகாமையாளர் :- | குறிப்பிடப்பட்ட ஆட்களை தெரிவு செய்யும் போது சிபார்சிகளை வழங்குதல் மற்றும் வீட்டினை நிர்மாணித்தல் மற்றும் அது தொடர்பிலான பின்பணி ஆய்வுகள், கண்காணிப்பு, உரிய பிரிவுடனான ஒருங்கிணைப்பு. |
| 5. சமூக அபிருத்தி உதவியாளர்:- | நிதமுமான பின்பணி ஆய்வு மற்றும் வீட்டினை நிர்மாணிக்கும் போது பிரச்சினைகள் உருவானால் முகாமையாளர்களுடனும் பிரதேச செயலாளருடனுமான ஒருங்கிணைப்புகள் வீட்டை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் முடிவடையும் வரையிலான முழு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள். |
| 6. பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்- | வீட்டினை தெரிவு செய்யும் போதும் நிர்மாணித்தலின் போதும் நன்கொடையாளர்களின் ஒத்துழைப்பினையும் பிரதேசவாசிகளினது மற்றும் பயனாளிக் குடும்பத்தின் உழைப்புப் பங்களிப்பினைப் பெற்றுக்கொண்டு வீட்டினை நிர்மாணிப்பதற்கு உச்சபட்ச ஒத்துழைப்பினை வழங்குவதுடன் வீட்டின் பணிகளை முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |

**III. நிதி ஒதுக்கீட்டினை வழங்குவது, மற்றும் தவணைப்பணத்தினை விடுவிக்கும் முறை:-**

வீடொன்றின் பொருட்டு மாவட்ட பணிப்பாளர் ஊடாக சமுதாய அடிப்படை வங்கிக்கு வழங்கப்படும் உச்சபட்ச தொகையானது - ரூபா 200,000 ஆகும்

முதலாம் தவணை – வழங்கும் தொகையில் 50%

இரண்டாம் தவணை – வழங்கும் தொகையில் 50%

இங்கு வீட்டின் ஆரம்பகட்ட வேலைகளை தொடங்கும் பொருட்டு முதலாம் தவணைப்பணம் விடுவிக்கப்பட்டதன் பின்னர் வீட்டினை நிர்மாணிக்கும் முன்னேற்றத்தினை பரீட்சித்து அறிக்கையிட்டதன் பின்னர் இரண்டாம் தவணைகளுக்கான நிதியை விடுவித்தல் வேண்டும்.

இந்த வீட்டினை நிர்மாணிக்கும் போது ஒரு வீட்டின் பொருட்டு வழங்கப்படும் ரூபா 02 இலட்சம் மற்றும் பிரதேசத்தின் கொடையாளிகளின் ஒத்துழைப்புடன் மிகக் கூடிய பெறுமதியினையுடைய வீட்டினை நிர்மாணிக்க உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**03. ரூபா 06 இலட்சம் வீடமைப்பு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்.**

**I. உறுதிப்படுத்திக் கொள்வதற்குறிய எடுகோள்கள்**

வீட்டினை அமைப்பதற்கு நிரந்தரமாக தனக்குச்சொந்தமான காணியொன்று இருத்தல் வேண்டும். குடும்ப அங்கத்தவர்கள் 04 பேராவது இருப்பது (தாய், தகப்பன் இரு பிள்ளைகள்) கட்டாயமானதாகும் என்பதுடன் விதவைப் பெண்ணையுடைய குடும்பம் ஒன்றாக இருத்தல் அல்லது மாற்றுத்திறனாளியொருவர் குடும்பத்தில் உள்ளமை (விசேடமாக வீட்டின் பிரதான குடியிறுப்பாளர் தொடர்பில் கவனத்திற் கொள்ளவும்) அல்லது பொருளாதாரமட்டத்தினை கவனத்திற்கொள்ளும் போது மிக வறுமையால் வாடும் குடும்பத்தினை தெரிவு செய்வது மிகப் பொருத்தமானதாகும். தகுதிகளை பூர்த்தி செய்யாத வீடமைப்பு பிரேரணைகள் நிராகரிக்கப்படலாம் என்பதனால் எடுகோள்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துவது கட்டாயமானதாகும்.

இதன் பொருட்டு 03 கட்டங்களின் கீழ் மாவட்ட அலுவலகங்கள் மூலம் சமுதாய அடிப்படை வங்கிக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவதுடன் ஒரு வீட்டின் பொருட்டு வழங்கப்படும் தொகையானது ரூபா 06 இலட்சம்சமாகும் (ரூபா 600,000/=) ஒரு தவணையில் ரூபா ஒரு ஒரு இலட்சம் (ரூபா 100,000/=) வீதம் மாத்திரம் என்ற வகையில் 06 கட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு நிதியை விடுவிப்பது பொருத்தமானதாகும்.

**II. தெரிவு செய்யும் செயற்பாடுகள்.**

மேலுள்ள விடயங்களின் பொருட்டு தலைமைத்துவத்தினை வழங்கி வீடில்லாத, வீட்டினை நிர்மாணித்துக்கொள்ள ஆற்றல்கள் இல்லாமல் இருந்தும் வீட்டினை நிர்மாணித்துக்கொள்ள தண்ணிடம் காணியுள்ள குடும்பம் ஒன்றினை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். தெரிவு செய்து கொள்ளலில் இலக்கம் 01 எடுகோளின் கீழ் பிரதேச செயலகப் பிரிவு ஒன்றுக்கு 03 வீடுகள் வீதம் என்ற வகையில் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். அடுத்த வீடுகளை முன்னுரிமை முறைக்கேற்றவாறு வரிசைப்படுத்தியிருத்தல் வேண்டும்.

**விசேடமாக இந்த வேலைத்திட்டத்தின் நிமிர்த்தம் வழங்கப்படும் படிவத்தின் மூலம் மாத்திரம் தகவல்களை வழங்க வேண்டியதுடன் இதன் பொருட்டு பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பொறுப்புக்களை வகித்தல் வேண்டும்.**

உரிய படிவங்களின்றிஅ னுப்பப்படும் பிரேரணைகள் நிராகரிக்கப்படும் மேலும் பல்வேறு படிவங்கள் மற்றும் பல்வேறு பெயர்களிலிருந்து அனுப்படும் பிரேரணைகளும் நிராகரிக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தினை சௌபாக்கியா விசேட வீடமைப்பு வேலைத்திட்டம் என அழைக்கமுடியும்.

விசேடமாக சமுதாய அடிப்படை சங்கத்தலைவர், செயலாளர், பிரிவுப்பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் பிரிவு சொந்தமான வலய முகாமையாளர்கள், தலைமையக முகாமையாளர்கள், மற்றும் பிரதேச செயலாளரின் அவதானிப்பு மற்றும் கண்காணிப்பின் பிரகாரம் இந்த வீடுகளை நிர்மாணித்தல் வேண்டும். நிதி ஒதுக்கீட்டினை விடுவிக்கும் போது ரூபா 05 இலட்சம் (ரூபா 500,000/=)வரை வலய/ தலைமையக முகாமையாளர்களின் அறிக்கையின் பிரகாரம் சமுதாய அடிப்படை வங்கிக்கு நிதியினை விடுவிக்க முடியும் என்பதுடன் இறுதித் தவணைப் பணத்தை விடுவிக்க முன்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

III. **நிதி ஒதுக்கீட்டினை வழங்குதல் மற்றும் தவணைப்பணத்தினை விடுவிக்கும் முறை:**
இங்கு மாவட்ட அலுவலகங்கள் ஊடாக சமுதாய அடிப்படை வங்கிக்கு ஒரு வீட்டிற்கு ரூபா 02 இலட்சம் வீதம் 03 கட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவதுடன் 2022 ஏப்ரல், மே மாதங்களில் நிதி வழங்கப்படும். பயனாளிகளுக்கு நிதியினை விடுவிக்கும் போது 06 கட்டங்களின் கீழ் கீழுள்ள பிரகாரம் நிதியினை வழங்குதல் வேண்டும்.

| கட்டம் | வழங்கப்படும் தொகை | முடிக்கப்பட வேண்டிய பணி வரையறைகள். |
|---|---|---|
| கட்டம் 01 | ரூபா 100,000.00 | பணிகளை ஆரம்பிப்பதும் அத்திவாரமிடுவதும் |
| கட்டம் 02 | ரூபா 100,000.00 | சுவர் கட்டி முடித்தல் |
| கட்டம் 03 | ரூபா 100,000.00 | கூறையிடல் |
| கட்டம் 04 | ரூபா 100,000.00 | சீமெந்தினால் பூசப்பட்டு வர்ணம்பூசி, நிலம் அமைத்தல் |
| கட்டம் 05 | ரூபா 100,000.00 | கதவு யன்னலிட்டு உபகரணங்களை பொருத்துதல் |
| கட்டம் 06 | ரூபா 100,000.00 | சகல பணிகளும் முடிக்கப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் கொடுப்பனவினை மேற்கொள்ளல். |

2022 செப்டம்பர் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் வீடமைப்பு நிர்மாணங்களை பூர்த்தி செய்து சகல கொடுப்பனவு நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இந்த வீட்டினை நிர்மாணிக்கும் போது பயனாளிக்குச் சொந்தமான காணியின் அமைவிடத்திற்கு ஏற்ப பொருத்தமான வீட்டுத்திட்டமிடலை அனுப்பப்பட்டுள்ள வீட்டின் வடிவங்களுக்கேற்ப தயாரித்துக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**04. கட்புல செவிப்புல ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்படும் பிரேரணைகள்.**
பிரதேச செயலகப் பிரிவிற்குள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாகவெளிக்காட்டப்படுகின்ற விசேட வீடுகளின் தேவையின் பொருட்டு தகவல்கள் வெளிக்காட்டப்பட்டவுடனேயே அது தொடர்பில் தங்களது உத்தியோகத்தர்களைக் கொண்டு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றினை தலைமைக்காரியாலயத்திற்கு வழங்கி தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியதுடன் அத்தகவல்களை முன்வைக்ககின்ற இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களுக்கு இதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளித்தல் வேண்டும்.

மேலும் தங்களது மாவட்டத்திற்குறியதாக சமுர்த்திப் பயனாளிகளின் வீடுகள் தொடர்பில் செய்தித் தாள்கள் மற்றும் இலத்திரணியல் ஊடகங்கள் ஊடாக பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுமானால் அவ்வாறான வீடுகளையுடைய குடும்பங்கள் தொடர்பில் குறித்த பிரதேச செயலகப் பிரிவின் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அறியாமல் இருப்பது ஏன் என்பது தொடர்பில் விசேடமாக தேடிப்பார்த்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். தனது பிரிவில் உள்ள மேற்படி எடுகோள்களை பூர்த்தி செய்துள்ள சமுர்த்திப் பயனாளிகள் தொடர்பான அறிக்கையினை வைத்துக்கொள்ள ஆலோசனைகளை வழங்குவது மிகப் பொருத்தமானதாக அமையும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்களினதும் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறு தேவைப்பாடுகள் உள்ள சமுர்த்திப் பயனாளி குறைந்த வருமானம் பெறுவோரின் வீடுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது மாதிரிப்படிவங்களுக்கேற்ப விபரங்களை இற்றைப்படுத்தி வைத்துக்கொள்வது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உதவியாளர், மற்றும் வலய முகாமையாளர்களின் பொறுப்புக்களாகும் என்பதனையும் கவனிக்கவும்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் ஒரு சில மாவட்டங்கள் வருடம் பூராகவும் வீடமைப்பு திட்டத்தினை நியாயமற்ற காரணங்களின் அடிப்படையில் திருத்தஞ்செய்ய தலைமைக்காரியாலயத்திற்கு அனுப்புவதனை கடந்தாண்டில் கவனிக்கக்கூடியதாக இருந்ததனால் அந்த சிரமங்களை தீர்த்துக்கொண்டு வெற்றிகரமான விதத்தில் சௌபாக்கியா விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தினை மாவட்ட மட்டத்தில் நமைமுறைப்படுத்துவது உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

அதன் பிரகாரம் இவ்வாண்டின் தனது மாவட்டத்திற்குச் சொந்தமான வீடமைப்புத்திட்டங்களை 2022 மார்ச் 10ம் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் வழங்குதல் வேண்டும். அடிக்கடி முன்வைக்கப்படுகின்ற வீடமைப்பு திட்டங்களின் பொருட்டு மாவட்டத்திற்கு பணம் வழங்கப்படமாட்டாது என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**05. பாதியளவு பூர்த்தி செய்த வீடுகளின் பொருட்டு பணத்தை வழங்குதல்.**

இங்கு குறித்த பிரிவுப்பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரால் பரீட்சித்துப்பார்த்து பிரிவுற்குள் மிகவும் பொருத்தமான குடும்பங்களை தெரிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். பின்னர் ஒரே தடவையில் விடுவிக்கப்படுகின்ற ரூபா ஒரு இலட்சம் தொகையினைப் பயன்படுத்திக் கொண்டும் பிரதேசத்திற்குள் உள்ள வலயங்களை ஒன்று திரட்டி வீட்டின் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

இங்கு விசேடமாக வீட்டின் பாதியளவு பணிகள் முடிக்கப்பட்டு மற்றும் எஞ்சிய பகுதியை அமைத்துக்கொள்ள முடியாமல் செயற்படுகின்ற நபர்கள் தொடர்பில் கவனமாக இருக்க வேண்டியதுடன் பொருளாதார ரீதியாக வறுமையால் வாடும் விதவைக்குடும்பங்கள் மற்றும் பெண் பிள்ளைகள் உள்ள பாதுகாப்பற்ற குடும்பங்கள் தொடர்பில் கூடிய கவனத்தினைச் செலுத்தி தெரிவு செய்து கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகப்பொருத்தமானதாகும்.

தெரிவு செய்யப்பட்ட வீடுகளின், வீடுகளை நிர்மாணிப்பதற்கு முன்னரான புகைப்படம், மற்றும் பெயர்பட்டியலை, கீழுள்ள படிவத்திற்கமைய தயாரித்து 2021.03.31ம் திகதிக்கு முன்னர் தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் மின்னஞ்சல் முகவரியான marketing@samurdhi.gov.lk இற்கு சமர்பிக்கவும். இப்பொயர்ப்பட்டியலை தயாரிக்கும் போது அரசியல் அதிகாரமுள்ளவர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

| தொ.இல | பி.செயலகப் பிரிவு | சமுதாய அடிப்படை வங்கி | கிரா. உத்தியோகத்தர் பிரிவு | பெயர் | முகவரி | காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

மேலும் இவ்வாறு தெரிவு செய்யப்படும் ஒவ்வொறு வீட்டினதும் வீட்டின் முன்னைய நிலை, மற்றும் பின்னைய நிலையினை குறிப்பிடும் புகைப்படத்தினை தங்களது பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டியதுடன் வீட்டின் திறப்பு விழா சந்தர்ப்பத்தில் அந்த அறிகையினை சமர்ப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

இந்த முன்னேற்றத்தினை ஒவ்வொரு மாதமும் வீடமைப்பு லொத்தர் நம்பிக்கைச் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதனால் இத்துடன் இணைத்துள்ள படிவத்திற்கமைய ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவுக்கு மின்னஞ்சல் ஊடாக வழங்கப்படல் வேண்டும் என்பதனை சுட்டிக்காட்டுகின்றேன். இங்கு 02 இலட்சம் வீடுகளுக்கும், 06 இலட்சம் வீடுகளுக்கும், ஒரு இலட்சம் வீடுகளுக்கும் தனித்தனியாக 03 படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக முன்னேற்றத்தினை அறிக்கையிடல் வேண்டும். இதற்கு மேலதிகமாக பிற அல்லது ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்பட்டவைகளை தங்களது மாவட்டத்தில் வழங்கப்பட்டிருப்பின் 02 இலட்சம் மற்றும் 06 இலட்சம் பெறுமதியான அறிக்கைகளின் கீழ் அத்தகவல்களையும் உட்படுத்தி அறிக்கைகளை பிழையின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

குறித்த அறிக்கைகளை சரியாக சமர்ப்பிக்காத மாவட்டங்கள் மற்றும் வலய சமுதாய அடிப்படை வங்கிகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்காமலிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு கட்டத்தின் இறுதியிலும் செலவாகிய தொகை தொடர்பில் அறிக்கையொன்றினை வழங்கி அடுத்த கட்டத்தின் பொருட்டு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் நிதிக்கோரிக்கைகளை விடுத்தல் வேண்டும்.

''சுபீட்சத்தின் நோக்கத்தின்'' கீழ் மேற்கொள்ளப்படும் சௌபாக்கியா சமுர்த்தி வீடமைப்பு வாசனா (அதிர்ஷ்ட) வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்ள உரிய உத்தியோகத்தரத்களை நெறிப்படுத்துவது தொடர்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதனை முக்கிய கடமையொன்றாகக் கருதி உங்கள் அனைவரினதும் செயற்பாடுள்ள பங்களிப்பினை வழங்குமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன.

ஆர்.பீ.பி திலக்கசிரி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர்- சமுர்த்தி, மனை பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. பிரதம கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
3. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - உ.ந.பொருட்டு
4. பணிப்பாளர் (நிதி) - உ.ந.பொருட்டு

Translation by M.M.M. Jawhar (Translator)